# தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

## தெற்கு அதிவேக வீதியில் மாகாணங்களுக்கிடையிலான பயணிகள் போக்குவரத்திற்கு பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான விலைமனுக்கோரல்

(கேள்வி இல. 26)

தெற்கு அதிவேக வீதியில் செய்யப்பட்ட கணிப்பீட்டிற்கமைய மாகாணங்களுக்கிடையிலான பயணிகள் போக்குவரத்திற்கு புதிய பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வீதிகளுக்கு அவ்வீதிகளுடன் ஒன்றாகச் செல்லும் வீதிகளில் (இடையூறுகள் ஏற்படும் வீதியில்) செல்லுபடியாகும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திர உரிமையாளர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

| தொ. இல. | வழித் தட இலக்கம் | வழி | | அனுமதிப் பத்திர எண்ணிக்கை | ஊடாக | சேவை வகை | ஒரு வழிப் பயணக் கட்டணம் | ஒரு நாளைக்கு பயணிக்க வேண்டிய பயண எண்ணிக்கை | தொழில்நுட்ப மதிப்பீடு அடிப்படையிலான கட்டணம் | ஒன்றாகச் செல்லும் (இடையூறு ஏற்படும்) வீதிகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பயண ஆரம்பம் | பயண முடிவு | | | | | | | |
| 01 | EX 1 - 5/26 | ஹக்மன | கொழும்பு பஸ்தியன் மாவத்தை | 01 | திஹகொட, மாத்தறை, கொடகம, தெற்கு அதிவேக வீதி, கொட்டாவ, ஹைலெவல் வீதி | அதி சொகுசு சேவை | ரூபா 610.00 | 02 | ரு. 1,581,120.00 | 1. கொழும்பிலிருந்து காலி வீதியில் தென் மாகாணம் அல்லது கொழும்பிலிருந்து காலி வீதியில் தென் மாகாணத்தின் ஊடாக வேறு மாகாணங்களுக்குப் பயணிக்கும் சேவைகள்<br>2. தென் மாகாணத்திலிருந்து அல்லது வேறு மாகாணங்களிலிருந்து தென் மாகாணம் ஊடாக கொழும்பு வரை காலி வீதியில் பயணிக்கும் சேவைகள் |
| 02 | EX 1 - 7/26 | மித்தெனிய | கொழும்பு பஸ்தியன் மாவத்தை | 01 | திஹகொட, மாத்தறை, கொடகம, தெற்கு அதிவேக வீதி, கொட்டாவ, ஹைலெவல் வீதி | அதி சொகுசு சேவை | ரூபா 720.00 | 02 | ரு. 1,866,240.00 | |
| 03 | EX 1 - 9/493 | எம்பிலிப்பிட்டி | கொழும்பு பஸ்தியன் மாவத்தை | 01 | ரன்ன, பெலியத்த, மாத்தறை, கொடகம, தெற்கு அதிவேக வீதி, கொட்டாவ, ஹைவெவல் வீதி | அதி சொகுசு சேவை | ரூபா 800.00 | 02 | ரு. 2,073.,600.00 | |
| 04 | EX 1 – 10/60 | அக்குரஸ்ஸ | கொழும்பு பஸ்தியன் மாவத்தை | 01 | ஹைலெவல் வீதி, கொட்டாவ, தெற்கு அதிவேக வீதி, இமதுவ | அதி சொகுசு சேவை | ரூபா 520.00 | 02 | ரு. 1,347,840.00 | |
| 05 | EX 1 – 11/32 | வீரக்கெட்டிய | கொழும்பு பஸ்தியன் மாவத்தை | 01 | ஹைலெவல் வீதி, கொட்டாவ, தெற்கு அதிவேக வீதி, கொடகம, மாத்தறை, பெலியத்த | அதி சொகுசு சேவை | ரூபா 690.00 | 02 | ரு. 1,788,480.00 | |
| 06 | EX 1 – 12/32 | கதிர்காமம் | கொழும்பு பஸ்தியன் மாவத்தை | 03 | ஹைலெவல் வீதி, கொட்டாவ, தெற்கு அதிவேக வீதி, கொடகம, மாத்தறை, மஹவெல | அதி சொகுசு சேவை | ரூபா 910.00 | 02 | ரு 2,358,720.00 | |
| | | கொழும்பு பஸ்தியன் மாவத்தை | கதிர்காமம் | 01 | | | | | | |
| 07 | EX 1 – 14/60 | தெனியாய | கொழும்பு பஸ்தியன் மாவத்தை | 01 | ராஜகிரிய, பத்தரமுல்ல, பன்னிப்பிட்டிய, கொட்டாவ, தெற்கு அதிவேக வீதி, இமதுவ | அதி சொகுசு சேவை | ரூபா 650.00 | 02 | ரு. 1,684,800.00 | |
| 08 | EX 1 – 16 | எல்பிட்டிய | கொழும்பு பஸ்தியன் மாவத்தை | 01 | ஹைலெவல் வீதி, கொட்டாவ, தெற்கு அதிவேக வீதி, குருந்துகஹ இடைவிலகல் | அதி சொகுசு சேவை | ரூபா 350.00 | 02 | ரு. 907,200.00 | |
| 09 | EX 1 – 18 | கொழும்பு பஸ்தியன் மாவத்தை | மாத்தறை | 02 | ராஜகிரிய, பன்னிப்பிட்டிய, கொட்டாவ, தெற்கு அதிவேக வீதி, கொடகம | அதி சொகுசு சேவை | ரூபா 530.00 | 02 | ரு. 1,373,760.00 | |
| | | மாத்தறை | கொழும்பு பஸ்தியன் மாவத்தை | 10 | | | | | | |
| 10 | EX 1 -21 | கடவத்தை | காலி | 01 | வெளிச்சுற்று அதிவேக வீதி, தெற்கு அதிவேக வீதி, பின்னதுவ | அதி சொகுசு சேவை | ரூபா 440.00 | 04 | ரு. 2,280,960.00 | |
| | | காலி | கடவத்தை | 02 | | | | | | |
| 11 | EX 1 – 22 | கடவத்தை | மாத்தறை | 01 | வெளிச்சுற்று அதிவேக வீதி, தெற்கு அதிவேக வீதி, கொடகம | அதி சொகுசு சேவை | ரூபா 540.00 | 02 | ரு. 1,399,680.00 | |
| | | மாத்தறை | கடவத்தை | 05 | | | | | | |
| 12 | EX 1 -23 | கடுவளை | காலி | 02 | வெளிச்சுற்று அதிவேக வீதி, தெற்கு அதிவேக வீதி, பின்னதுவ | அதி சொகுசு சேவை | ரூபா 430.00 | 04 | ரு. 2,229,120.00 | |
| | | காலி | கடுவளை | 04 | | | | | | |
| 13 | EX 1 – 25/450 | பாணந்துறை | மாத்தறை | 01 | களனிகம தெற்கு அதிவேக வீதி, கொடகம | அதி சொகுசு சேவை | ரூபா 470.00 | 04 | ரு. 2,436,480.00 | |
| | | மாத்தறை | பாணந்துறை | 03 | | | | | | |
| 14 | EX 1 – 29/353 | கம்புறுப்பிட்டிய | கொழும்பு பஸ்தியன் மாவத்தை | 01 | திஹகொட, மாத்தறை, கொடகம, தெற்கு அதிவேக வீதி, கொட்டாவ, ஹைலெவல் வீதி | அதி சொகுசு சேவை | ரூபா 590.00 | 02 | ரு. 1,529,280.00 | |
| 15 | EX 1 – 41 | அம்பலாங்கொட | கொழும்பு பஸ்தியன் மாவத்தை | 01 | குருந்துகஹ, ஹெதெப்ம. தெற்கு அதிவேக வீதி, கொட்டாவ, பன்னிப்பிட்டிய, பத்தரமுல்ல, ராஜகிரிய | அதி சொகுசு சேவை | ரூபா 370.00 | 02 | ரூ. 959,040.00 | |
| | | கொழும்பு பஸ்தியன் மாவத்தை | அம்பலாங்கொட | 01 | | | | | | |
| 16 | EX 1 – 24/01 | கண்டி | மாத்தறை | 01 | நிட்டம்புவ, கடவத்தை, வெளிச்சுற்று அதிவேக வீதி, தெற்கு அதிவேக வீதி, கொடகம | அதி சொகுசு சேவை | ரூபா 830.00 | 02 | ரு. 2,151,360.00 | 1. கண்டி – கொழும்பு, கொழும்பு – கண்டி பயணிக்கும் பயண சேவைகள்<br>2. கண்டி, கொழும்பிலிருந்து காலி வீதியில் தென் மாகாணத்திற்கு அல்லது கொழும்பிலிருந்து காலி வீதியில் தென் மாகாணத்தின் ஊடாக வேறு மாகாணங்களுக்குப் பயணிக்கும் பயண சேவைகள்<br>3. தென் மாகாணத்திலிருந்து அல்லது வேறு மாகாணங்களிலிருந்து தென் மாகாணத்தின் ஊடாக கொழும்பு, கண்டி வரை காலி வீதியில் பயணிக்கும் பயண சேவைகள் |
| 17 | EX 1 – 6/270 | மாத்தறை | நீர்கொழும்பு | 01 | கொடகம, தெற்கு அதிவேக வீதி, வெளிச்சுற்று அதிவேக வீதி, கடவத்தை, கம்பஹா, மினுவங்கொட, கட்டுநாயக்க | அதி சொகுசு சேவை | ரூபா 670.00 | 02 | 1,736,640.00 | 1. கட்டுநாயக்க, நீர்கொழும்பு, கம்பஹாவில் இருந்து காலி வீதியில் தென் மாகாணத்திற்கு அல்லது தென் மாகாணத்தின் ஊடாக வேறு மாகாணங்களுக்குப் பயணிக்கும் பயண சேவைகள்<br>2. தென் மாகாணத்திலிருந்து அல்லது வேறு மாகாணங்களிலிருந்து தென் மாகாணத்தின் ஊடாக கட்டுநாயக்க, நீர்கொழும்பு, கம்பஹா வரை காலி வீதியில் பயணிக்கும் பயண சேவைகள் |
| | | நீர்கொழும்பு | மாத்தறை | 01 | | | | | | |

அனைத்து விண்ணப்பதாரர்களும் பின்வரும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

- ❖ ஒவ்வொரு வழித்தடத்திற்கும் வெவ்வேறான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- ❖ ஒரு விண்ணப்பதாரர் மூன்று வழித்தடங்களுக்கு மாத்திரமே விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும்.
- ❖ ஒரு வழித் தடத்திற்கு ஒரு விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பத்தை மாத்திரமே சமர்ப்பிக்க வேண்டும்.
- ❖ நிறுவனம் அல்லது தொழில்முயற்சியொன்று கேள்வியைச் சமர்ப்பிக்கையில், அதன் பணிப்பாளர் அல்லது பங்குதாரருக்கு தனியாக கேள்விப் படிவங்களை அவ்வழித்தடங்களுக்காக சமர்ப்பிக்க முடியாது. அவ்வாறே நிறுவனம் அல்லது தொழில்முயற்சியொன்று ஒரே பணிப்பாளர்கள் அல்லது பக்குதாரர்களைக் கொண்ட பல்வேறு நிறுவனங்கள் அல்லது தொழில்முயற்சிகளுக்கு தனியாக கேள்விப் படிவங்களை அவ்வழித்தடங்களுக்காக சமர்ப்பிக்க முடியாது.
- ❖ தெற்கு அதிவேக வீதியில் பஸ் வண்டிகள் பயணிப்பதற்காக தற்போது பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தைக் கொண்டுள்ளவர்களுக்கு இவ்வழித்தடங்களுக்காக வீண்ணப்பிக்க முடியாது.
- ❖ பொய்யான தகவல்களைச் சமர்ப்பித்தல் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படுவதற்கான காரணமாகலாம்.
- ❖ தெற்கு அதிவேக வீதியின் பொருட்டு ஒரு விண்ணப்பதாரருக்கு ஒரு பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் மாத்திரமே வழங்கப்படும்.
- ❖ புதிய பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகையில் தற்போது அந்த வீதிகளுக்காக வழங்கப்பட்டுள்ள பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் / தற்காலிக பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் இரத்தாகிவிடும்.
- ❖ ஒன்றுக்கு மேற்பட்ட வழித்தடத்திற்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் தொழில்நுட்ப மதிப்பீட்டை விட கூடிய விகிதம் சகிதமான கேள்வியைச் சமர்ப்பித்துள்ள வழித்தடத்திற்கான பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு தகுதி பெறுவர்.
- ❖ இக்கேள்வியின் மூலம் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் முன்னதாகவே இரத்துச் செய்யப்பட்டால் தவிர, ஒரு வருடத்திற்குக் குறையாத, 03 வருடங்களுக்கு மேற்படாத அந்த அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்கு செல்லுபடியாதல் வேண்டும். அக்காலத்திற்குள் வழங்கப்படும் சேவைகள் தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டக் கொள்கையின் பிரகாரம் அனுமதிப்பத்திர உரிமையாளரால் செய்யப்படும் வேண்டுகோளுக்கிணங்க அனுமதிப்பத்திரம் காலாவதியாகும் நாள் முதல் ஒரு வருடத்திற்குக் குறையாத மற்றும் 03 வருடங்களுக்கு மேற்படாத காலத்திற்கு புதுப்பிக்க முடியும். (தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 25வது மற்றும் 30வது அத்தியாயத்தின் பிரகாரம்)
- ❖ பஸ் வண்டிகளில் ஆசனங்களை ஒதுக்கிக் கொள்ளும் நடவடிக்கைகள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் மட்டுமே மேற்கொள்ளப்படும் என்பதுடன் இதற்கு முரணான வகையில் செயற்படும் பஸ் உரிமையாளர்களின் அனுமதிப் பத்திரங்கள் இரத்துச் செய்யப்படும்.

**கவனிக்கவும்:** இதற்கு இயைபுடைய வகையில் ஏதாவது நீதிமன்றமொன்றில் வழக்கொன்று இருக்குமானால், அந்த வழக்கிற்கு தாக்கம் ஏற்படாத வகையில் இந்த கேள்விகள் வழங்கப்படும்.

மேலேயுள்ள சேவைகளுக்கான நேர அட்டவணை, கட்டண விபரம் ஆகியவை அடங்கலான அனைத்து விபரங்களும் கேள்வி விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்த வழித்தடங்களுக்கான விண்ணப்பப் படிவங்களை கொழும்பு-05, பார்க் வீதி, 214ஆம் இலக்கத்திலமைந்துள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிலிருந்து ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் 3,000.00 ரூபாவை ரொக்கப்பணத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

2018-05-04ஆம் திகதியிலிருந்து 2018-05-23ஆம் திகதி வரை (இரு தினங்களும் உட்பட) வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை கேள்வி விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும். ஆணைக்குழுவினால் வழங்கப்படும் விண்ணப்பப் பத்திரம் மாத்திரமே கேள்வி மனுக்களைச் சமர்ப்பிப்பதற்காக செல்லுபடியாகும்.

கேள்விதாரர்கள் கேள்விப் பிணையாக 200,000.00 ரூபாவை வைப்புச் செய்ய வேண்டும் என்பதுடன், கேள்விப் பிணைத் தொகையை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கணக்கிற்கு வரவு வைத்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை 2018-05-24ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு முன் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் காசாளருக்குச் சமர்ப்பித்து பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளல் வேண்டும். இந்தப் பற்றுச்சீட்டை கேள்வி விண்ணப்பப் படிவத்துடன் முதலாவது கடித உறையில் உள்ளிடல் வேண்டும்.

கேள்விக்குரித்தான விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளல் 2018-05-24ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவுறுமென்பதுடன், குறித்த நேரம் முடிவுற்றதும் உடனடியாகவே கேள்வி மனுக்கள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கேட்போர் கூடத்தில் திறக்கப்படும். தேவைப்படும் அனைத்து விபரங்களையும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு வருகைதந்து அல்லது 011-2553144 என்ற தொலைபேசி எண்ணினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி மனுக்களை கையளிக்கும் அல்லது இரத்துச் செய்யும் உரிமை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கே உரித்தானது என்பதுடன், கேள்விதாரர்களுக்கு ஏற்படும் செலவினங்களுக்கு ஆணைக்குழு பொறுப்பேற்க மாட்டாது.

தலைவர்,
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு,
பார்க் வீதி, கொழும்பு – 05.